# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1582 – 2008 දෙසැම්බර් 26 වැනි සිකුරාදා 2008.12.26**

*1582 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1470 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – | ஏல விற்பனைகள் | 1472 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | – | நானாவித அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2009, சனவரி 02 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, திசெம்பர் 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 15 கன்ஸ்டேல் பிளேஸ், காசில் ஹில் 2154, அவுஸ்திரேலியா (முன்னர் மாடி 12A - இல. 307, குயின்ஸ் வீதி, பிரிஸ்பேன். குயின்ஸ்லாண்ட் 4000. அவுஸ்திரேலியாவை எமது முகவரியாகக் கொண்ட UAS பார்மசூட்டிக்கல்ஸ் புறொப்பட்டி லிமிட்டட் ஆகிய நாம். 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி, சிட்னியைச் சேர்ந்த திரு. ஈவன் கென்னத் மக்கினோஸ் எனும் பிரபல நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்டு, எமது அற்றோனித் தத்துவக்காராக திரு. சித்ரால் ஜயன்த டீ சில்வா என்பவரை நியமித்த அற்றோணி தத்துவத்தை அவரின் வேண்டுகோளின்படி, 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆந் திகதி முதல் இரத்து செய்துள்ளோம். என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

UAS பார்மசூட்டிக்கல்ஸ் புறொப்பட்டி லிமிட்டட்.

12- 642

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரளஸ்கமுவ, பெப்பிலியான, தெகிவளை வீதி, 60/ 11பி இலக்கத்தைச் சேர்ந்த பட்ரிக் மக்ஸ்வோர்த் ஆகிய நான், 1997 செப்டெம்பர் மாதம் 15 ஆந் திகதி பகிரங்க நொத்தாரிசு டபிள்யு. கே. டி. டி. ஜெயதிலக்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 47 ஆம் இலக்க அட்டோர்ணித் தத்துவத்தின் கீழ், கெஸ்பாவ, பண்டாரகம, இசுருபாய, 202/ 32 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பிலோமினா பெர்னடெட் மக்ஸ்வோர்த்துக்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை ரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றேன், எனவும் குறிப்பிட்ட அட்டோர்ணித் தத்துவத்தின் கீழே மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன் என இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கின்றேன்

பட்ரிக் மக்ஸ்வோர்த்.

12- 628/1

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரளஸ்கமுவ, பெப்பிலியான, தெகிவளை வீதி, 60/ 11பி இலக்கத்தைச் சேர்ந்த பட்ரிக் மக்ஸ்வோர்த் ஆகிய நான், 1999 ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி பகிரங்க நொத்தாரிசு டபிள்யு. கே. டி. டி. ஜெயதிலக்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 385 ஆம் இலக்க அட்டோர்ணித் தத்துவத்தின் கீழ், கெஸ்பாவ, பண்டாரகம, இசுருபாய, 202/ 32 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பிலோமினா பெர்னடெட் மக்ஸ்வோர்த்துக்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை ரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றேன், எனவும் குறிப்பிட்ட அட்டோர்ணித் தத்துவத்தின் கீழே மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன் என இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கின்றேன்

பட்ரிக் மக்ஸ்வோர்த்.

12- 628/2

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்கொடை, களனிமுல்ல, கம்சபா வீதி, இல. 178/2 ஏ இல் வசிக்கும் அத்தபத்து ஹேவாவசம் லியனகே லீலா ரம்யலத்தா அல்லது லீலா ரம்யலத்தா ஜெயவர்தன ஆகிய நான் அத்துருகிரிய ஒறுவல தெற்கு, இல. 283 இல் வசிக்கும் அத்தபத்து ஹேவாவசம் லியனகே நன்தனி மல்லிகா என்பவருக்கு டப்ளிவ். கே. டி. கே. வராகொட ஆகிய பிரசித்த நொத்தாரிசினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 2778 மற்றும் 2003.12.02 ஆந் திகதி கொண்ட அட்டோனி அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட அட்டோர்னி அதிகாரம் இன்று முதல் அதாவது 2008. 11. 01 ஆந் திகதி முதல் செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது என இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

அத்தபத்து ஹேவாவசம் லியனகே
லீலாரம்யலதா அல்லது லீலா ரம்யலதா ஜெயவர்தன.

12- 660

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2008 கார்த்திகை மாதம் 06 ஆந் திகதி கூட்டு இணைக்கப் பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : நவமக டெக்னொலொஜிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம். : பீவீ 66097
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 45, எல்பட் ஹவுஸ் கார்டின்ஸ் கொழும்பு 03

கோ - சேர்வ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனி செக்கட்ரிஸ்,
நிறுவனத்தின் முகாமையாளர்,

12-640

## கடல் கடந்த கம்பனியின் கிளையை பதிதல் தொடர்பான பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 489 ஆம் பிரிவின் கீழ்

கம்பனியின் பெயர் : பராப் கம்பனி
கம்பனி இலக்கம். : எவ்சி 1042
பதிவுத் திகதி : 13.11.2008
பதிவு அலுவலக முகவரி : பராப்கம்பனி இல. 51/2, வோட் பிளேஸ், கொழும்பு 07

பிஸ்னஸ்மேட் (பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்
45, பிரேபுறூக் வீதி, கொழும்பு 02

12-690

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் :-*

*கம்பனியின் பெயர் : பனாமா டயரி புரோடட் (கம்பனி) லிமிட்டெட்*
*கம்பனி இலக்கம். : பீவீ3573*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : இல.31, ஒக்டோபர் 2008*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் : பனாமாவெஸ்ட், பனாமா*

செயலாளர்,

*12-674*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008. 10. 24 ஆந் திகதி பி அன்ட் டபிள்யூ. கோபரேட் செக்கடரீயல் (பிரைவேட்) லிமிட்டட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் : பீ அன்ட் டபிள்யூ. கோர்ப்பரேட் செக்கடரீயல் (பிரைவேட்) லிமிட்டட*
*கம்பனி இலக்கமும் திகதியும்: பீவீ 65966 ; 24.10.2008*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட*
*அலுவலகம் : இல. 3/17, கின்சி ரோட், கொழும்பு 07*

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கம்பனிச் செயலாளர்.

*12-703*

---

## தத்துவ அதிகாரம் இரத்துச் செய்தல்

இல. 88-11, 34 ஆவது ஒழுங்கை, தொடர்மாடி, 5 என் ஜக்ஷன் ஹயிட்ஸ், நியூயோர்க், ஐக்கிய அமெரிக்கா என்னுமிடத்தில் வசித்தும், தற்போது 80- 20, 208 ஆம் வீதி, ஹோலிஸ் ஹில், நியூயோர்க், ஐக்கிய அமெரிக்கா என்னுமிடத்தில் வசிக்கும் ஆரிய டுலீப் அத்துல ரணசிங்க, ஆரிய ஜவஹர்லால் ஆனந்த பீரிஸ் ரணசிங்க, ஆரிய தேவபிரிய மங்கல ரணசிங்க ஆகிய நாம் 1992 ஒற்றோபர் 2 ஆந் திகதி நியூயோர்க் நகரத்தில் பிரசித்த நொத்தாரிசான மெல் லொட்பி என்பவர் முன்னிலையில் தினக்குறிப்பேடு இல. 10591 தொகுதி 9 பக்கம் 134 இல் பதிவு செய்யப்பட்டு தெஹிவளை, 115, துடுகைமுனு வீத, களுபோவிலையைச் சேர்ந்த ஆரிய புதபிரிய பந்துல் ரணசிங்க என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட தத்துவ அதிகாரம் ரத்து செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் நாம் இலங்கை பொது ஜனத்திற்கு அறியத் தருகின்றோம்.

இங்கு கூறப்பட்டுள்ளவரினது தத்துவ அதிகாரம் உடனடியாக முடிவடைவதால் இது முதல் இவரது எந்தவித நடவடிக்கைகளுக்கோ செயற்பாடுகளுக்கோ நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

ஏ. டீ. ஏ. ரணசிங்க,
ஏ. ஜே. ஏ. பி. ரணசிங்க,
ஏ. டீ. எம். ரணசிங்க,

*12-675*

---

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் : த இன்டஸ்ரீயல் ரிலேஷன்ஸ் அசோசியேற்ஸ் ஒவ் ஸ்ரீ லங்கா*
*கம்பனி இலக்கம் : ஜீஏ 2308*
*கூட்டிணைக்கப்பட்ட திகதியும் : 17.11.2008*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட*
*அலுவலக முகவரி : மினிஸ்ரி ஒவ் லேபர், கிரியேஷன்ஸ் அன்ட் மேன் பவர், லேபர் செக்கட்ரியேட்ஸ், கொழும்பு - 05*

கன்சல்ட்டன் அன்ட் கொபரேட் செக்கடரீஸ்,
(பிரைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்.

*தொ. இல. 2689418*

*12-673/1*

---

## பெயர் மாற்றம் பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது:-*

*நிறுவனத்தின் பழைய பெயர் : மெக்லரன்ஸ் வெயர்ஹவுசிங் லிமிடட்*
*நிறுவனத்தின் இலக்கம். : பி. பீ. 133*
*பதிவு அலுவலகம் : இல. 123, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04*
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட*
*நிறுவனத்தின் புதிய பெயர் : எம். ஜீ. லொஜிஸ்டிக்ஸ் லிமிடட்*

மெக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்

*12-753*

---

## கம்பனியின் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள கம்பனிகள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.*

*கம்பனி இலக்கம். : பீ. வீ. 65916*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 20.10.2008*
*கம்பனியின் பெயர் : 1 பி ஆர் பனான்டோ றெசிடென்சீஸ் (பிறைவேற் லிமிற்றற்*
*பதிவு செய்யப்பட்ட*
*அலுவலக விலாசமம் : எம் 02 நிவசிபுற, கொற்றுகொட*
*கம்பனி இலக்கம். : பீ. வீ. 66298*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 21.11.2008*
*கம்பனியின் பெயர் : சதேன் ஸ்பார்ஸ் இன்ரநஸனல் (பிறைவேட்) லிமிற்றற்*
*பதிவு செய்யப்பட்ட*
*அலுவலக விலாசமம் : லொற் 51, பியகம, எக்ஸ்போட், புறொசீடங் சோண், வல்கம, மல்வானை*

பணிப்பாளர் சபையின் அறிவித்தலுக்கமைய
மன்செக சேவிசஸ் (பிறைவேற்) லிமிற்றற் (பிவி6)
(மேற்குறிப்பிட்ட கம்பனிகளின் செயலாளர்கள்)

6எ, டெஸ்சிவில்லா அவனியு,
பம்பலப்பிட்டி,
கொழும்பு 4,
தொலைபேசி இல. 2597910, 2597911

*12-672*

# ஏல விற்பனை

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சி –காலி நகர கிளை

ஆதனம் ஏலவிற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் 2009 ஜனவரி மாதம் 16 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.*

*1. தென் மாகாணம் காலி மாவட்டம் தல்பே பத்து கரகொட நாபடவ மற்றும் யட்டலமட்ட கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் எம். ஏ. சொல்வின் பிரேமரத்னவின் 06. 12. 1984 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2243 இல் காண்பிக்கப்பட்ட கரகொட எஸ்டேட் தற்சமயம் மாயேன என்ற காணியின் லொட் 1 இல் லொட் 1 A யின் பகுதி படுத்திய காணித் துண்டான லொட் 1 யின் லொட் பி இக் காணியின் விஸ்தீரணம் 12ஏ 02ரூ. 0பே மற்றும் இக் காணியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாம் சேர்ந்து.*

*2. I. தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்து, யக்கமுல்ல பிரதேச எல்லையில் கரகொட நாப்பட்ட யட்டமலகல கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் எச். எல். ஆர். ஜயசுன்தரயின் 21. 07. 2001 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 933பி யில் காண்பிக்கப்பட்ட (கரகொட டிவிஷன்) பகுதியான மாயேன என்ற காணியின் லொட் 1 என்ற காணி துண்டுக்கு பகுதி படுத்திய காணி துண்டென லொட் 1 ஏ இக் காணியின் விஸ் தீரணம் 12ஏ. 2ரூட். 0பே)*

*II. தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்து, யக்கமுல்ல பிரதேச எல்லையில் கரகொட மற்றும் நாபடவா கிராமத்தில் அமைந்துள்ள கரகொட எஸ்டேட்டின் பகுதியான மாயேண டிவிஷன் என்ற காணிக்கு நில அளவையாளர் எச். எல். ஆர்.ஜயசுந்தரவின் 27 மற்றும் 28.03.2001 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 933ஏ இல் காண்பிக்கப்பட்ட லொட் பி இக் காணியின் விஸ்தீரணம் 6 ஏக்கர் 0 ரூட் 25 பேர்ச்சஸ் அல்லது 2.492 ஹெக்டயார் கடன் எடுத்த தொம்பகொட லியனகே ரண்ஜித் வசன்ந்த என்பவர் மேற்படி ஆதனங்களை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைத்துள்ளனர்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2007.08.03 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2007. 08. 08 ஆந் திகதியுடைய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2008.12.26 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் ''த ஐலண்ட'',''திவயின' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்க.*

***ஆதனத்திற்குச் செல்லும் விதம்**.- விடயம் 1 இல் விவரிக்கப்பட்ட ஆதனம் :*

*(அ) யக்கமுல்ல கிராமத்தில் இருந்து 2 1/4 மைல் தூரம் பிரதான வீதியுடாக அக்குரஸ்ஸ டவுனுக்கு சென்று லீவணகொட தபால் காரியாலயத்துக்கு செல்லவும அதன் பிறகு இடது பக்கம் திரும்பி எல். ஆர்.சி. காணிகளுக்கு செல்லும் பாதையூடாக சென்று மொரகட்டிய பாதைக்கு அடையவும் இடது பக்கம் இக்காணி அமைந்துள்ளது.*

***கட்டணம் செலுத்தும் விதம்**.- ஏல முடிவில் கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை பணமாக செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10%;*
*(2) உள்ளூராட்சி மன்ற வரிக் கட்டணம் 01%;*
*(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5 %;*
*(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000;*
*(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500;*
*(6) விற்பனைக்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.*
*(7) ஏல முடிவில் இருந்து 30 நாட்களுக்குள் மிகுதி கொள்வனவு விலை 90% கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ , பிரதான காரியாலயம் அல்லது கமர்ஷல் பாங்க் ஒப் கிலோன் காலி நகர கிளையில் செலுத்த வேண்டும்.*

*வேறு விபரங்கள், உறுதி பற்றிய விபரங்கள் பின்வரும் இடத்தில் பெற்று கொள்ள முடியும் :-*

*முகாமையாளர்,*
*கமர்ஷல் பாங்க் ஒப்*
*சிலோன் பி. எல். சி.*
*30, பிரதான வீதி,*
*காலி.*

*தொலைபேசி/ 091 - 2234356*
*091 - 2225786*
*091 - 2234469*

*தொலைநகல் : 091 - 2234467*

எல். பி. சேனநாயக்க ஜே. பி.
(சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற மூத்த ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்,
வர்த்தக மேல் நீதிமன்றம் மற்றும்
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரசாங்க
வர்த்தக வங்கிகளின் உத்தரவுபெற்ற ஏலதாரர்,

இல. 99 புதுக்கடைவீதி, கொழும்பு 12
தொலைபேசி /பக்ஸ்:- 2445393

*12-711*

---

## றுஹுன அபிவிருத்தி வங்கி - வெலிகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 04 வது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்)*

### சொத்துக்கள் ஏல விற்பனை

*றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத் தின்படி கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2009.01.13 ஆந் திகதி சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் மு. ப. 10.30 மணிக்கு ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.*

01. தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிகம கோரலேயில் பெனேடியனவில் அமைந்துள்ள கொரொக்கஹ விலஹேன பி. ப. 10741 இல் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 1ஏ. எனும் ஒரு ஏக்கர் ஒரு ரூட் பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 16.5பே) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், போன்றன அடங்கலாக.

02. மேலே கூறப்பட்ட கொரோக்கஹவில ஹேன பி. ப. 10741 குறிப்பிட்டபடி இலக்கம் 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 02 எனும் ஒரு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (01ஏ. 0ரூ. 21பே) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்ச்செய்கை, அடங்கலாக.

03. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள கொரொக்கஹவிலஹேன பி. பி. 10741 இல் குறிப்பிட்டபடி 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 04 எனும் ஒரு ஏக்கர், இரண்டு ரூட், முப்பத்தேழு பேர்ச்சஸ் (01ஏ. 02றூ. 37பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, அடங்கலாக.

04. மேலே குறிப்பிட்ட பெனேடியனவில் அமைந்துள்ள கொரொக்கஹவிலகே ன பி. பி. 10741 இல் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியை பிரித்து வேராக்கப்பட்ட இலக்கம் 06 எனும் ஒரு ஏக்கர், மூன்று ரூட், இருபத்து நான்கு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 24பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், உட்படவும்,

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் (இல. 5486 ஈட்டுப் பத்திரத்தின் கீழ்)** .-

மேலே குறிப்பிட்டபெவேரியயில் அமைந்துள்ள பி. ப. 10741 என்ற வரைபடத்தில் குறிப்பிட்டபடி இலக்கம் 08 எனும் கொரோக் கஹவிலஹேன எனும் காணியை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4428 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட் முப்பத்து ஏழு பேர்ச்சஸ் (01ஏ. 03ரூ. 37பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கைகளும் அடங்கலாக.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் (இல. 8392 எனும் ஈட்டுப் பத்திரம்)** .-

**01.** மேலே குறிப்பிட்டகொரக்கஹஹேன பி. பி. 10741 இல் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1 எ எனும் ஒரு ஏக்கர் ஒரு ரூட் பதினாறும் தசம் ஐந்து பேர்ச்சஸ் (01ஏ. 01றூ. 16.5பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கைகளும் அடங்கலாக.

02. மேலே குறிப்பிட்ட பெனேடியனவில் அமைந்துள்ள கொரொக்கஹவிலஹேனயில் பி. பி. 1071 வில் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 2 ஒரு ஏக்கர் ஒரு ரூட் இருபத்தொரு பேர்ச்சஸ் (01ஏ. 01றூ. 21பே.) காணியை பிரித்து அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.

03. மேலே குறிப்பிட்ட பெனேடியனவில் அமைந்துள்ள கொரொக்கஹவிலஹேனயில் பி. பி. 10741 ஏக்கர் காணியில் 1, 2, 3, 4, 5, 6, 7 என்ற காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4 ஒரு ஏக்கர் இரண்டு றூட், 37 பேர்ச்சஸ் (01ஏ. 02ரூ. 37பே) அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.

04. மேலே குறிப்பிட்டபடி பெனேடியனவில் அமைந்துள்ள பி. பி. 10741 இல் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 இல் எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 06 எனும் ஒரு ஏக்கர் மூன்று ரூட் இருபத்திநான்கு பேர்ச்சஸ் (01ஏ. 03 றூ. 24பே) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்தும் அடங்கலாக.

05. மேலே குறிப்பிட்டபடி பெனேடியனவில் அமைந்துள்ள பி. பி. 10741 இல் குறிப்பிட்ட இலக்கம் 08 எனும் கொரோக்கஹவில ஹேவனயில் மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 4428 இல் குறிப்பிட்டபடி ஒரு ஏக்கர், மூன்று ரூட், முப்பத்தேழு பேர்ச்சஸ் (01ஏ. 03றூ. 37பே) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்ச்செய்கைகளும் அடங்கலாக.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2006.06.02 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலையும், 2005.08.25 ஆந் திகதிய “தினமின”, “தினகரன்” , “ த ஐலண்ட்”, போன்ற சஞ்சிகைகளிலும் பார்க்கலாம்.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்** .- வெலிகம பெனேடியன கனிஷ்ட வித்தியாலயத்தின் அருகே இடப்பக்கமாக விழும் சந்தாதிஸ்ஸ மதவத்தையில் 1/2 கி. மீற்றர் செல்ல வலப்பக்கமாக இக் காணி அமைந்துள்ளது,

**செலுத்தும் விதம்**.- ஏல விற்பனை தீர்ந்துவிட்டதும் கொள்வன வாளரினால் கீழ் கண்டபடி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 01%;
(3) ஏல விற்பனையாளர் தரகு பணம் 2.5 %;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணம் ரூபா 500;
(5) விற்பனை செலவும் இதர செலவுகளும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பம்புரணறுஹுன அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். மேற்படி செலுத்தத் தவறின் தற்போதைக்கும் 30 நாட்களுக்குள் குறிப்பிட்டபணத்தை செலுத்தாதுவிடின் மீண்டும் அச்சொத்துக்களை வங்கிக்கு விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

மேலதிக விபரங்களுக்கு மேலுள்ள முகவரியை தொடர்புகொள்க.

தொலைபேசி இலக்கம்.- 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனன்த,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை

தொலைபேசி இல. 041 - 2228731

12-650

## செலான் வங்கி பி எல் சி - பட்டதாரிகள் தொழில் முயற்சியாளர் கடன் திட்டம்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விஷேட சரத்துக்கள் ) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணி விற்பனை**

***01.*** ***மேல்மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த பல்லேபத்துவில் மடப்பாத்தையில் அமைந்துள்ள "என்சால்வத்த" என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். எல். குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 12/08/2006 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 10364 இல் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு மேற்கூறப்பட்ட காணித்துண்டு 1 அங்கு காணப்படுகின்ற பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடனும் இருபது பேர்ச் (0ஏ. 0ரூ. 20பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***02.*** ***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளை பல்லேபத்துவிலுள்ள மடப்பாத்தவில் அமைந்துள்ள ''என்சால்வத்த'' என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதி பெற்ற நில அளவையாளர் எச். எல். குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 01. 01. 1987 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2337 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 6 எச். ஐ. எனக் குறிப்பிடப் பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு களும் மேற்கூறப்பட்ட காணித்துண்டு 6 எச் ஐ. எல்லாப் பெருந்தோட்டம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0ரூ. 13.5பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது, இது கல்கிஸ்சை காணிப் பதிவகத்தில் எம் 1610/179 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***மேற்கூறப்பட்ட காணியின் மீள் அளவீடு செய்யப்பட்ட காணி பின்வருமாறு.***

***மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையைச் சேர்ந்த பல்லேபத்துவில் மடப்பாத்தவில் அமைந்துள்ள "என்சல்வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச். எல். குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 20.08. 2006 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 10369 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 1 என அடையாளமிடப்பட்ட சகலதும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகளும் மேற்கூறப்பட்ட காணித்துண்டு 1 சகல பெருந்தோட்டம் மற்றும் அனைத்துடனும் பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ, 0ரூ. 13.5பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***அனுமதிபெற்ற நில அளவையாளர் டி. எஸ். வீரசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 12. 06. 1958 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 2118 இல் துண்டு 6 கே (15 அடி அகலம்) என அடையாளமிடப்பட்ட வீதி ஒதுக்கத்துடன்.***

*(''கடன்பட்டோர்'' என்ற நுகேகொடையிலுள்ள வியாபார பதிவு இல. W 70381 ஐக் கொண்டுள்ள வஜிர அசோஸியேட்ஸ் என்ற நிறுவனப் பெயரின் கீழ் பங்குடமை பெயரின் கீழ் பங்குடமை வியாபாரம் நடத்தப்பட்டு வருகின்ற மடப்பாதையிலுள்ள ஹேவா மல்லிகா ஆச்சிகே இந்திரரத்ன, நுகேகொடையைச் சேர்ந்த கம்மன்பிலிகே ஜயந்த சந்திரரத்ன, நுகேகொடையைச் சேர்ந்த வஜிர பிரபாத் பெரேரா மடப் பாதையைச் சேர்ந்த காரியவசம்போவிதன்திரி சுமணதாச ஆகியோருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பிஎல்சிக்கு ஈடுவைக் கப்பட்ட சொத்து.)*

*மேலே விவரிக்கப்பட்ட காணியை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2009 சனவரி 22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 03. 10.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 19.09.2008 ஆந் திகதிய*** *''டெய்லிமிரர்'', மற்றும் ''லங்காதீப'' 17.09.2008 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகையையும் பார்க்கவும்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்** *.- பிலியந்தல நகர நிலை யத்திலிருந்து ஹொரன வீதி ஊடாக 400 மீற்றர் சென்று வலது புறமாகத் திரும்பி மாடபாத்த வீதி ஊடாக சுமார் 2 1/2 மீற்றர் சென்று கொட்டகெதர சந்தியைத் தாண்டிய பின்னர் 12 அடி அகலமுடைய வீதி ஒதுக்கம் வலது புறமாகத்திரும்பி குறிப்பிட்ட காணியைச் சென்றடை வதற்கு சுமார் 100 மீற்றர் செல்லவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்** *.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தவேண்டியுள்ளது.*

*(1) கொள்வனவு விலையின் 10%; (2) விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (01%; (3) எலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனம் ரூபா 500 (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி எல் சி இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.*

*காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) செலான் வங்கி பி. எல். சி. சிலிங்கோ செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3 என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி: 2456285, 2456263, 2456284*

*ரி. அன்ட் எச். ஒக்சன்,*
*இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ.*
*தொலைபேசி : 2696155, 2572940*

*துசித கருணாரத்ன,*
*அனுமதிபெற்ற ஏலதாரர்,*
*மற்றும் நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்*

*12-705*

**மக்கள் வங்கி - வெலிகம கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கசட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2009.01.16 ஆந் திகதி மு. ப. 11.00 க்கு இங்கு கீழ் குறிப்பிட்ட சொத்துக்களை சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்.**- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் மோதர தொடன்துவ யில் அமைந்துள்ள ஹேனன்கே வத்த என்ற காணியின் லொட் 26 இன் லொட் 01 காணியும், பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் போன்றன அடங்கலும் விஸ்தீரணம் கொண்டதாகும்.

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10பே. (பத்து பேர்ச்சஸ்))

**மேலதிக விபரங்களுக்கு.**- 2008.09.05 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலிலும், 2008.11.03 ஆந் திகதியின் ''தினமின'' சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனை பகுதியிலும், கவனத்தைச் செலுத்துக.

**சொத்துக்களுக்கு பிரவேசிக்கும்.**- காலி கொழும்பு வீதியில் குமார கன்த சந்தியிலிருந்து வலப்பக்கமாக விழும் தார் பாதையில் மீற்றர் 100 அளவு தூரம் முன்னோக்கி செல்ல வீதியில் வலப்பக்கமாக இருக்கும் மண் பாதையில் 50 மீற்றர் அளவு சென்றதும் பாதையின் இடதுபக்கமாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் இறுதியாக கீழ் கண்ட படி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகாரியின் விற்பனை விலையில் 01%;
(3) ஏல விற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500;
(5) விற்பனை செலவும், வேறு செலவுகள் இருப்பின் அவற்றுக்கான பணம் ;
(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரை கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பிட்டனிய வீதியில் இலக்கம் 38/1 என்ற நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்துக. தொலைபேசி இலக்கம் : 041 - 2222792, 2222822, 2224773. தொலைநகல் இலக்கம் : 041 - 2222688

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். மேற்படி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திருப்பவும் செலுத்தாதுவிடவும், மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்/
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம மாத்தறை,

தொலைபேசி இல. 041 - 2228731
0714 - 438516

12-732

---

**செலான் வங்கி பி. எல். சி. - அனுராதபுரம் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள்) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**காணி ஏலவிற்பனை**

வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில், கனதார கோறளை, நவரகம் பலாத்த கிழக்கு பிராந்திய செயலகப் பிரிவிலுள்ள அனுராதபுரம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002.03.16 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 52 மீள அளவையீடு செய்யப்பட்ட அத்துடன் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட FUP A 5 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 155 'கொம்பிச்சன் குளம் ஹேன' என்றழைக்கப்படுகின்ற துண்டு 1 மற்றும் 2 என அடையாளமிடப்பட்ட காணியின் இரண்டு உப பிரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒரு துண்டின் அத்தியவசியமான பகுதியாக இருந்துள்ள அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டி. பி. ஆரியசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003.01.11 திகதியிடப்பட்ட மீள அளவையிடப்பட்ட நிலவரைபட இல. 1989 மற்றும் உப பிரிவாக்கப்பட்டதில் துண்டு 1 என இப்பொழுது அடையாளமிடப்பட்ட இரண்டு காணித்துண்டுகளின் (ஒரு பகுதியாகிய) ஒதுக்கப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் சைபர் ஏக்கர் சைபர் ரூட் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6பே.) மாத்திரம் அல்லது 0.01515 ஹெக்டயார் விஸ் தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேற் கூறப்பட்ட காணித்துண்டு 1 கீழே நிரலிடப்பட்டுள்ள முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியின் ஒரு பகுதியாக விளங்குகின்றது :-

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் கன்தர கோறளை நவரகம வலாத்த கிழக்குப் பிரிவில் அனுராதபுரம் கிழக்கின் நகர எல்லைக்குள் அமைந்துள்ள கொம்பிச்சன்குளம் ஹேன என்றழைக் கப்படுகின்ற காணிக்குப் புறம்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு 2 தாள் இல. 2 நிலவரைபட இல. FUP A5 இல் துண்டு 155 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் சைபர் தசம் சைபர் ஏழு சைபர் எட்டு ஹெக்டயார் (0.0708ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2009, சனவரி 20 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

(''கடன்பட்டோர்'' என்ற வகையில் அனுராதபுரத்தைச் சேர்ந்த அஸ்வெத்தும ஆராச்சிலாகே கோசல கங்கநாத் குலதிலக மற்றும் உக்கு பண்டாகே குமுதினி ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி.எல்.சிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- அனுராதபுரம் புதிய நகரின் தனஹயகம சந்தியிலிருந்து புலன்குளம் திஸாவவே மாவத்தையிலுள்ள சந்தியைத் தாண்டி 1 மீற்றர் புபுதுபுரவை நோக்கி நேராக 1 கி. மீ. பிரயாணம் செய்து குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு சுமார் 30 மீற்றர் பிரயாணம் செய்யவும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.05.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி 2008.10.17ஆந் திகதிய ''டெயிலிமிரர்'', ''லங்காதீப'' மற்றும் 2008.10.19 ஆந் திகதிய ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%) மும் ; (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5 %) மும் ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 உம் ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனம் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு அத்துடன் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சி இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை "உதவிப் பொது முகாமையாளர் - (சட்டம்) செலான் வங்கி பிஎல்சி சிலிங்கோ செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும் தொலைபேசி : 2456285, 2456263, 2456284

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ
தொலைபேசி இல. : 2696155, 2572940

12-706

---

**பான் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோறளை, கண்டி மாநகரசபை எல்லைகளுக்குள் பேராதெனியவில் அமைந்துள்ளதும் பேராதனை வீதி தற்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை வரிமதிப்பு இல. 412/1 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஆர். டபிள்யு. எம். வீரக்கூன் அவர்களினால் தயாரிக்கப்பட்டு 1991. 05. 01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5284 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 2 இன் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. திஸாநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு (2006. 09. 12 ஆந் திகதி எல்லைகள் முறையாக சேர்க்கப்பட்டுள்ளது) 2006.07.29 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 365 இல் துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை**

